## குருவிட்ட பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருவிட்ட பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பாதீடப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையிலான ஒப்பீடு அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீடப்பட்ட தொகை தனியான நிரலாகக் காண்பித்தல்

(ii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் குறிப்பாக இனங்காணப்படாமல் பேரேட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 89,223 தொகையான ஆரம்ப செலவு மீதி மற்றும் ஆண்டின் போதான பெறுவனவு ரூபா 1,385,002 தொகையுடன் ரூபா 1,474,225 கூட்டுத்தொகை ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் முத்திரைக் கட்டண பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ஆரம்ப மீதி ரூபா 6,706,333 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் முத்திரைக் கட்டணப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் சரியான ஆரம்ப மீதி ரூபா 21,204,129 ஆக இருந்தது.

(இ) 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வில் சிபார்சின் அடிப்படையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட பொருட்களின் பெறுமதியை இனங்கண்டு அகற்றுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 420,661 தொகையான கடன்கொடுத்தோர் ஆண்டின் செலவினத்திற்கு கொண்டு வரப்படாமையால் மீளாய்வாண்டின் செலவினம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கடன்கொடுத்தோருக்காக முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 421,713 தொகையான மிகை ஒதுக்கீடுகள் தொடர்பாக சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வங்கியினால் 2013 நவம்பர் மாதத்தின் போது சபையின் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 60,514 தொகையான வட்டிப் பணம் தொடர்பாக 2013 திசெம்பர் 31 வரையும் காசேட்டில் சீராக்கம் செய்யப்பட்டிருக்ககவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 11 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 199,321,139 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் படி அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,840,307 ஆனமையால் ரூபா 148,480,832 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 6 வருமான விடயங்களுக்குரிய வருமானப் பதிவேடுகளிலும் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரமான மீதிகளிலும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 96,967,806 கூட்டுப்பெறுமதியுடைய 3 நிலையான சொத்து மீதிகள் தொடர்பான எழுத்து மூல சான்றுகள் இல்லாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 6 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 45,509,701 கூட்டுப்பெறுமதியான கொடுக்கல் வாங்கல் தொடர்பான தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்கு 2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் குறிப்பாக இனங்காணப்படாமல் கணக்கீடு செய்யப்பட்டமையினால் மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பணமாக காண்பிக்கப்பட்ட ரூபா 7,865,200 தொகையான மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) ரூபா 123,384 கூட்டுத்தொகையான 6 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் 2014 திசெம்பர் 31 வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

அங்கீகாரமின்றி 6 செலவின விடயங்களில் தேறிய நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 5,190,665 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,451,337 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,540,284 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 2,217 | 1,598 | 4,173 |
| வாடகை | 7,286 | 6,227 | 5,626 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,322 | 1,474 | - |
| ஏனைய வருமானம் | 29,265 | 28,952 | 13,315 |

**2.2.2 வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான குருவிட்ட நகரத்தில் புதிய சந்தையின் 36 கடைகளில் 12 கடைகளுக்குரித்தாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூன்று மாதம் தொடக்கம் 04 வருடங்கள் வரை ரூபா 1,393,521 தொகையான வாடகைப் பணம் மற்றும் அதற்குரிய மிகைக் கட்டணமாக ரூபா 3,067,520 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 வருட காலத்தை மிகைத்து 23, 27, 28, 05, 24, 10, 35 மற்றும் 17 ஆம் இலக்கங்கள் கொண்ட 8 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய வாடகைப் பணம் ரூபா 1,335,000 ஆக இருந்ததுடன் அது அறவிடவேண்டிய மொத்த நிலுவையில் 96 சதவீதமாக இருந்தது. இந்தக் கடைகளை 2009 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கும் சந்தர்ப்பத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 11 ஆந் திகதி வரை அச் சொத்துக்களைச் சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 ஏனைய வருமானம்

1999 உப விதிகளின் படி முச்சக்கர வண்டிக்கான கட்டண அறவிடல் ஒரு முச்சக்கர வண்டிக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 50 ஆக இருந்த போதிலும் அந்த கட்டணம் நாளதுவரையாக திருத்தஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையிலும் ரூபா 18,696 தொகையான நிலுவை வருமானம் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

குருவிட்ட வாராந்த சந்தை நடாத்தப்படுகின்ற 2 ரூட், 1 பேர்ச் அளவினை காணி புகையிரத ஒதுக்கத்திற்காக விடுவிப்பதற்கு 2013 யூன் 28 ஆந் திகதி ரூபா 71,849 தொகை புகையிரத தலைமை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் இதனை வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட பிணை முறிக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையின் படி இத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் அந்த மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இந்தக் காணிக்காக நிரந்தர பிணை ஒன்று பெறப்பட்டமையும் உறுதிப்படுத்தப்படவில்லை.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

குருவிட்ட இலங்கை வங்கிக் கிளையில் பேணப்பட்டு வருகின்ற சபைக்குரிய வங்கிக் கணக்கொன்றில் 2008 ஆம் ஆண்டு முதல் ரூபா 52,538 தொகையான மீதி செயற்பாடற்று காணப்பட்டிருந்தும் அது தொடர்பான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் மார்ச் 03 வரை தாய்லாந்து சுற்றுலாவிற்காக 13 உறுப்பினர்களுக்கு ரூபா 90,000 வீதம் சபை நிதியத்திலிருந்து ரூபா 1,170,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சனாதிபதி செயலாளரின் 2012 யூன் 11 ஆந் திகதிய சிஎஸ்ஏ/1/1/16 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றுபவர்கள் நாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பயிற்சியின் முடிவில் பெறப்பட்ட அறிவினை உள்நாட்டு ரீதியாக பயன்படுத்தும் முறை தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

07 செலவின விடயங்கள் தொடர்பான நிதிஏற்பாடுகளில் 27 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்